வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன
பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை
உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 08 சனிக்கிழமை (24 09 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 301

★ எவர்சில்வர்
★ விளையாட்டுப்
பொருள்கள்
★ பிளாஸ்டிக்
பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

ஆரம்பக் கட்ட சமாதானப் பேச்சுக்கு

அரச தரப்புப் பிரதிநிதிகளை நியமித்து

தலைவர் பிரபாவுக்கு சந்திரிகா கடிதம்

லயனல் தலைமையில் நால்வர் குழு

சந்திரிகா

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறவுள்ள ஆரம்பக்கட்ட சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் நால்வரையும் பிரதமர் சந்திரிகா நியமித்துள்ளார்.

தமது தரப்புப் பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை, தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரனுக்கு எழுதிய பதில் கடிதத்தில் அவர் தெரியப்படுத்தி உள்ளார்.

தகவல்துறை அமைச்சின் செயலாளர் திரு. லயனல் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் திரு. பாலபத்த பெண்டி, இலங்கை வங்கியின் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம், டிசைன் கொன்சொற்ரோறியம் நிறுவனத்தின் பணிப்பாளரும் கட்டடக் கலைஞருமான திரு. எம்.என்.எல். குணரத்னா ஆகிய நால்வரையும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக நியமித்திருப்பதாக தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

லயனல் பெர்னாண்டோ

தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன், விடுதலைப்புலிகள் தரப்புப் பிரதிநிதிகளின் பெயர்களைத் தெரியப்படுத்தி இம்மாதம் 14 ஆம் திகதி பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் பிரதமர் சந்திரிகா 21-9-94 திகதியிட்ட கடிதத்தை தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிவைத்தார்.

அந்தக் கடிதம் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலமாகக் கிடைத்தது.

இதற்கிடையில் — அரசாங்கப் பிரதிநிதிகள் நால்வரின் பெயர்களும் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மா

[6 ஆம் பக்கம் பார்க்க]

சமாதானப் பேச்சுக்களுக்கு கருணாநிதி வரவேற்பு

தமிழர் பிரச்சினை தொடர்பாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையே பேச்சு நடந்து பிரச்சினைக்கு நல்லதொரு அரசியல் தீர்வு காணப்பட்டால் அதனை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கும்

தி மு க தலைவர் திரு மு. கருணாநிதி முன் கண்டவாறு கூறியிருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் வகையில் ம. தி. மு. க. தலைவர் வை. கோபாலசாமி உரையாற்றி வருவதாகவும் கருணாநிதி தெரிவித்துள்ளார். (ஐ)

உரம் விலையில் 30 வீதம் குறைப்பு

உரத்தின் விலை 30 சதவீதத்தினால் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது

அமைச்சரவை இவ்வாறு தீர்மானித்துள்ளது.

எம்பிலிபிட்டிய சம்பவம்:

மேஜர் தரத்திலான இருவர் உட்பட 5 படையினர் கைது

கொழும்பு, செப். 24

எம்பிலிப்பிட்டிய பகுதியில் 1989 இல் 31 மாணவர்கள் கடத்தப்பட்டுச் சென்ற பின்னர் காணாமற்போன சம்பவம் தொடர்பாக ஐந்து இராணுவ அதிகாரிகளை இராணுவப்பொலீஸார் நேற்று கைது செய்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களில் இரண்டு பேர் மேஜர் தரத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப பாடசாலை அதிபரும் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-எ)

கைவிலங்கிடப்பட்டு அழைத்து செல்லப்பட்டனர்

பிணை அனுமதி மறுப்பு

கொழும்பு, செப். 24

எம்பிலிப்பிட்டிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இராணுவத்தினருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் கலவர காலத்தில் எம்பிலிப்பிட்டியாவில் பணியாற்றினர் என்றும் —

[ஆம் பக்கம் பார்க்க]

சூரியகந்த பகுதியில் மேலும் 3 இடங்கள் தோண்டப்படும்

கொழும்பு, செப். 24

தென் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகள் தலைதூக்கியிருந்த போது பலர் கொல்லப்பட்டு, ஒருங்கே புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டுபிடிக்குமுகமாக சூரியகந்தவில் மேலும் மூன்று இடங்கள் தோண்டப்படவுள்ளன.

இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

காணாமற் போனவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் சார்பில் நீதிமன்றத்தில் சட்டத்தரணி செனவிரத்ன சமர்ப்பித்த மனு மீதான விசாரணையின் பின்னர் புதிதாக புதைகுழிகளைத் தோண்டும் உத்தரவை எம்பிலிப்பிட்டி நீதிவான் நேற்றுப் பிறப்பித்தார். [இ-எ]

மட்டக்களப்பில் 2 படையினர் பலி

டிராக்டரில் சென்று புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 24

மட்டக்களப்பு மாவட்டம் 39 ஆம் கிராமத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது கடந்த புதன்று பிற்பகல் 2 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய கொமாண்டோ தாக்குதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

உழவு இயந்திரம் ஒன்றில் சென்ற விடுதலைப் புலிப் போராளிகளே இத்தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் இளம்பிறை அல்லது சசிக்குமார் (தர்மரட்ணம் கதாநாதன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்படையினர் மீதுபுலிகள் தாக்குதல்

மூவர் கொல்லப்பட்டனர்

கொழும்பு, செப். 24

கெப்பட்டிக்கொல்லாவைக் கிராமத்தில் காவலில் ஈடுபட்டிருந்த ஊர்காவல்படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின்போது மூன்று ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது காயமடைந்த ஊர்காவல் படையைச்சேர்ந்த ஒருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-எ-6)

சொத்தி உபாலி மீண்டும் கைது!

கொழும்பு, செப். 24

மாத்தளை மாநகரசபையின் ஐ.தே.க. உறுப்பினர் ரஸ்மர் ஹுசேயின் கொலை தொடர்பாக பிரபல 'பாதாள உலக' தலைவர் சொத்தி உபாலியும் அவரது சகா தட்டே சோமே என்று அழைக்கப்படும் சோமபாலவும் கைது செய்யப்பட்டு மாத்தளை நீதிவான் மெர்வின் வீரதுங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களுடன் வேறு ஏழு சந்தேகநபர்களையும் இரகசியப் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

பலத்த பாதுகாப்புடன் சொத்தி உபாலியும் தட்டே சோமேயும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்காக கொண்டு வரப்பட்டபோது மக்கள் பெரும் எண்ணிக்கையில் வீதியில் திரண்டு நின்று பார்த்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது

நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிமன்றத்தினுள்ளும் வெளியேயும் பாதுகாப்பு பலப்படுத் [illegible] தத்தை பொலீஸார் காவலில்

[illegible]

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப் 24

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அர[illegible]னர் அறிவித்துள்ளனர்.

மூதூரில் படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 24

மூதூர் கைமுந்தான் என்னும் இடத்தில் கடந்த புதன்று முற்பகல் 10 மணியளவில் படையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார். மற்றும் ஒரு இளைஞரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

தங்கராசா இதயச்சந்திரன் [அழகன்-மூதூர்] என்ற ஆதரவாளரே வீரச்சாவடைந்தவராவார்.

நேசதுரை ஒளிஸ்வரன் [வயது 18, என்ற இளைஞரே கொல்லப்பட்டார்.

மர்மப்பொருளுடன் விளையாடிய சிறுவன் காயம்

யாழ்ப்பாணம். செப். 24

அடையாளம் தெரியாத மர்மப் பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய சிறுவர் ஒருவன் திடீரென அது வெடித்ததில் படுகாயமடைந்தான்.

மாங்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

'பிளாம்பயான்' கப்பல் புதனன்று இங்கு வரும்

பயண ஒழுங்கில் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 24

வியாழக்கிழமை தோறும் திருமலையில் இருந்து பருத்தித்துறைக்கு நோயாளர்களை ஏற்றிவரும் 'பிளாம் பயான்' கப்பல் அடுத்த வாரம் ஒரு நாள் முன்பாக புதன்கிழமை இங்கு வந்துசேரும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி செல்வி மேரி பேரின்ஸ் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரும் இக்கப்பலில் யாழ் வரவிருக்கிறார்.

இங்கிருந்து கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு இக்கப்பல் மறுநாள் வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு திரும்பிச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

இந்தியாவில் கொள்ளை நோய் 200 ற்கு மேற்பட்டோர் பலி

மக்கள் பீதியினால் வெளியேற்றம்

சூரத், செப் 24

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத் நகரப் பகுதியில் பரவி வரும் 'பிளேக்' என்னும் கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டு இருநூறுக்கு மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

'பிளேக் நோய் பரவியுள்ள சூரத் நகரை விட்டு மக்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

வெளியேறிச் செல்லும் மக்களை தடுத்து நிறுத்த அதிகாரிகள் எடுத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

படை நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட

யாழ்.மாவட்ட மாணவருக்கு ஆஸி. கல்வி நிதியம் உதவி

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்வியைத் தொடர ஆஸ்திரேலியாவில் உள்ள ''இலங்கை மாணவர் கல்வி நிதியம்'' என்ற அமைப்பு உதவ முன்வந்துள்ளது.

முதல் கட்டமாக யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 மாணவர்களுக்கான ஆலோசனைகளை அந்த அமைப்பு

[ஆம் பக்கம் பார்க்க]

திலீபன் உண்ணாவிரத நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள்

யாழ்ப்பாணம். செப். 24

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவின் ஒன்பதாம் நாள் நிகழ்வுகள் நேற்றும் குடாநாடு எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதம் நடக்கும் மேடைகளை நோக்கி அதிக எண்ணிக்கையான ஊர்திகளும், பறவைக் காவடிகளும் ஆட்டக் காவடிகளும் பவனி சென்றன.

ஆங்காங்கே சிரமதானப் பணிகளும் நடைபெற்றன.

நல்லூரில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதத்தில் அரசாங்கத் திணைக்களங்கள், தொழில் நிறுவனங்கள், தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், சர்வோதய உறுப்பினர்கள், தொண்டர் நிறுவனங்களின் உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் என்று பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

ஜனாதிபதித் தேர்தலில்

சோமவன்ஸ உட்பட ஆறு பேர் போட்டி!

கொழும்பு, செப் 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஜே.வி.பி யின் சார்பில் சோமவன்ஸ அமரசிங்காவும் —

சிங்கள மகா சம்மத பூமி புத்ர கட்சியின் சார்பில் சட்டத்தரணி ஹரிச்சந்திர விஜேதுங்கவும் —

முன்னாள் அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்காவும் —

ரெலோ கட்சியின் சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவரும் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும்— ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் காமினி திஸாநாயக்காவும் போட்டியிடவுள்ளார்கள் என்பது தெரிந்ததே.

கிட்டு பூங்கா பார்வையிடும் நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 24

நல்லூரில் உள்ள கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா பொது மக்கள் பார்வைக்காகத் திறக்கப்பட்டிருக்கும் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக பூங்கா பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி வாரத்தில் சனி, ஞாயிறு மற்றும் ஏனைய விடுமுறை தினங்களில் தினமும் முற்பகல் 10 மணிமுதல் இரவு 10 மணி வரையும் —

ஏனைய கிழமை நாட்களில் தினமும் பிற்பகல் 3 மணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

எம்.பிக்கள் கார் வாங்க ரூபா 3 லட்சம் கடன்!

கொழும்பு, செப். 24

சுங்கத் தீர்வையற்ற கார்களை வாங்க வட்டியில்லாக் கடனாக ஒவ்வொரு எம்.பிக்கும் 3 லட்சம் ரூபா வழங்கப்படும் என்று பிரதமர் சந்திரிகா அறிவித்திருக்கிறார்.

இக்கடன் எம்.பிக்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் என்றும் அவர் கூறினார்.

அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவர் இத்தகவலை வெளியிட்டார். (ஒ-எ)

புத்தூர் வடக்கு மஞ்சளுணாப்பிட்டி
ஸ்ரீ ஞானவைரவர் கோயில்
13ஆம் நாள் திருவிழா
24-09-1994 சனி பிற்பகல் 6.00 மணி
தெய்வீக சொல்லிசை
மாங்கனி பெற்ற மாதரசி
வழங்குபவர்:
சொல்லிசைச் செல்வர், அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா அவர்கள்
[பக்கவாத்திய சகிதம்]
(ஆசிரியர், உரும்பிராய் வச த.வித்தி)
அனைவரும் வருக; அருளினைப்பெறுக.
13ஆம் நாள் உபயகாரர்
[7930]

யா/நடேஸ்வராக் கல்லூரி
காங்கேசன்துறை
பாடசாலை அபிவிருத்திச் சபை
வருடாந்தப் பொதுக் கூட்டம்
இடம்: யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
காலம்: 02-10-1994 ஞாயிற்றுக்கிழமை
காலை பத்து மணி
குறிப்பு: சகல பெற்றோர்களும், உரிய பணத்தை அலுவலகத்தில் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் வேண்டும்.
சகலரையும் அன்புடன் அழைக்கிறோம்.
க. தவபாலசிங்கம்
அதிபர்
(சி/9221)

பதவி வெற்றிடம்
பிரபல தனியார் நிறுவனத்திற்கு
ஆண் லிகிதர் / தட்டெழுத்தாளர்
(ஆங்கிலம்/தமிழ்) பதவி வெற்றிடத்திற்கு க.பொ.த (உ. த/சாதாரணம்) தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
ஆங்கில அறிவு உடையவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும். 30-09-1994க்கு முன் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
விளம்பர இலக்கம்: 698
உதயன் பத்திரிகை நிறுவனம்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9223)

வட பிராந்திய
வணிகர் கழகங்களின் சமாஜம்
முக்கிய அறிவித்தல்
1994 — 1995ஆம் ஆண்டிற்கான பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 02 10 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு 21, மேமோடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம் பணிமனையில் நடைபெறுமென்பதனை அன்புடன் அறியத் தருகிறோம்
நன்றி
செயலாளர்.
(கி-9225)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் கோட்டம்
முக்கிய அறிவித்தல்
25-09-1994 ஞாயிற்றுக்கிழமை சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பிரத்தியேக வகுப்புகளையும் மூடி நல்லூரில் நடைபெறும் தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளவும் இயக்குநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் காலை 8-00 மணிக்கு நல்லூரில் சமூகமளிக்க வேண்டும்
செயலாளர்
யாழ் கோட்டம்.
[கி-9222]

I. A. B.
DEC.- 1994 LONDON EXAM
FOUND
INTER
FINALS
துரித மீட்டல் பயிற்சியும் கடந்த கால வினாத்தாள் மீட்டல் வகுப்புக்களும்
ஆரம்பம்: 28-09-94
விபரங்கட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14 St. Peter's Lane, Jaffna,
[கி-9358]

தேசிய பாடசாலை ஏதும் வன்னி பகுதியில் இல்லை!

ஆனால் பதுளை மாவட்டத்தில் மட்டும் 27

கொழும்பு, செப். 24

பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தும் விஷயத்தில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் பொலன்னறுவ மாவட்டங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

உயர்கல்வி மற்றும் கல்வி அமைச்சு நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரியவந்ததாக "டெய்லிநியூஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

பதுளை மாவட்டத்தில் மட்டும் 27 தேசியப் பாடசாலைகள் உள்ளன.

பொலன்னறுவையில் உள்ள றோயல் கல்லூரியை தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்தக் கோரி விடுக்கப்பட்ட வேண்டுகோள் கடந்த அரசினால் கவனிக்கப்படவில்லை.

அதேசமயம் ஆய்வு கூட வசதிகள் இல்லாத பாடசாலைகள் கூட தேசியப்பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

"இப்பாடசாலைகளின் தரத்தை நாம் குறைக்கப் போவதில்லை. தேசியப் பாடசாலைக்கு தேவையான வசதிகளை இவற்றுக்குச் செய்து கொடுக்கப் போகின்றோம்" — இப்படி அமைச்சர் றிச்சர்ட் பத்திரண தெரிவித்தார்.

புறக்கணிக்கப்பட்ட மாவட்டங்களில் தேசியப்பாடசாலைகளை அமைக்க நாம் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

1984 இல் நாட்டில் 18 தேசியப் பாடசாலைகள் இருந்தன. இப்போது இதன் எண்ணிக்கை 160 ஆக உயர்ந்துள்ளது.

மாவட்ட ரீதியில் தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை வருமாறு;

★ கொழும்பு – 18,
★ கம்பஹா – 05
★ களுத்துறை – 05
★ கண்டி – 16
★ மாத்தளை – 01
★ நுவரெலியா – 02
★ காலி – 10
★ மாத்தறை – 08
★ அம்பாந்தோட்டை – 12
★ மட்டக்களப்பு – 02
★ குருநாகல் – 08
★ புத்தளம் – 03
★ யாழ்ப்பாணம் – 04
★ அம்பாறை – 05
★ திருகோணமலை – 05
★ அனுராதபுரம் – 03
★ பதுளை – 27
★ மொனறாகலை – 09
★ இரத்தினபுரி – 10
★ கேகாலை – 07

[ஒ-எ]

கட்சியைத் தாக்கி பேசும் உறுப்பினர் மீது நடவடிக்கை

ஐ.தே.க. தலைமைப் பீடம் முடிவு

கொழும்பு, செப். 24

கடந்த பொதுத்தேர்தலில் அடைந்த தோல்விக்காக கட்சித் தலைமையை தாக்கிப் பேசிவரும் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசிய கட்சித் தலைமைபீடம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் அதிகாரபூர்வப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் தோல்வியின் பின்னர் கட்சித்தலைமைத்துவத்தை தாக்கி வருபவர்களில் முன்னாள் அமைச்சர்களான சிறிசேன கூரே, ஏ.ஜே. ரணசிங்கா ஆகியோர் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

கட்சியின் ஒழுக்க நெறிகளை மீறிச் செயல்படுபவர்கள் எவராயினும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (ஐ-எ)

மாதாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், செப் 24

வடமராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களின் மாதாந்த கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பி.ப. 3-30 மணிக்கு அல்வாய் கின்னத்தம்பி பாடசாலையில் நடைபெறும்.

இந்த ஒன்றுகூடலில் வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

சிறிடி பாபா பிறந்ததின விழா!

யாழ்ப்பாணம், செப். 24

சிறிடி பாபா பிறந்ததின விழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி நிலையத்தில் காலையும் மாலையும் நடைபெறும். (க)

ஆலயங்களில்

யாழ். அரச போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னையின் திருநாள் நாளை ஞாயிறுகிழமை கொண்டாடப்படும்.

இன்று மாலை 5.15 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் நடைபெறும். நாளை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ஒ)

உதைபந்தாட்ட மத்தியஸ்தருக்கு

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம், மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடத்தவுள்ளது. (ஒ-20)

மா கிலோ 8.50க்கு விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் புதிய விலையான — கிலோ 8-50 சதத்துக்கு—மா தாராளமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஒ-17)

விக்கிரமசிங்க பதில் அமைச்சராக சத்திய பிரமாணம்

வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் டி.பி. விக்கிரமசிங்க பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடு திரும்பும் வரை இவர் இந்தப் பதவியை வகிப்பார். (ஒ 3)

சிறு குற்றங்கள் புரிந்த கைதிகள் விடுவிக்கப்படுவர்

கொழும்பு செப். 24

அவசரகாலச்சட்ட விதிகள், மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் பலர் சில தினங்களில் விடுவிக்கப்படவுள்ளனர் என 'வெரித்தாஸ்' சிங்கள சேவையில் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

நாட்டில் உள்ள பல முகாம்களில் மேற்படி கைதிகள் சுமார் 800 பேர் உள்ளனர் என்றும் — இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை— தகவல்களை மறைத்த குற்றத்தின் பேரில் கைதாகியுள்ளவர்களில் கணிசமான எண்ணிக்கையானோர் மீதுசட்ட நடவடிக்கை எடுப்பதை இடைநிறுத்தும் உத்தரவை சட்டமா அதிபர் விரைவில் விடுப்பார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

முற்போக்கு முன்னணியின் எம்.பி. பதவி ஏற்றார்

கொழும்பு. செப். 24

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இலங்கை முற்போக்கு முன்னணிக்கு கிடைத்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு குணசேனா டிசில்வா வஸ்கடுவ நியமிக்கப்பட்டார்.

இவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கத் தலைவராவார்.

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் இடம் பெறுவது பெரும் சாதனை என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ—எ)

சிறப்பு மனிதராவதற்கு இளைஞர் சமய நெறியை பின்பற்ற வேண்டும்

"வேதமுரசு" வெளியீட்டுவிழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 24

'சிறந்த பண்பாளர்களாக வாழ இளந்தலைமுறையினர் சமய நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்'

"வேதமுரசு" சமயச் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பேசிய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

இந்து இளைஞர் மன்றத்தினால் நல்லை ஆதீனத்தில் வேதமுரசு சஞ்சிகை வெளியீட்டு விழா நடத்தப்பட்டது. விழாவுக்கு திரு. கே. தனபாலன் தலைமை [illegible]

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் [illegible] கூறியதாவது;

சைவத்தின் தத்துவங்கள் அறநெறிகள் குறித்த யோகிகளின் கருத்துக்களையும் சைவத்தின் மாண்புகளையும் மக்களிடையே எடுத்துக்கூறும் வகையில் வேதமுரசு சிறப்பு அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. இளைஞர்கள் மத்தியில் ஒரு தெளிவு ஏற்படுத்தக்கூடிய வழிமுறைகளைக் கொண்டுள்ள இந்தச் சஞ்சிகையின் பணி தொடர வேண்டும். இதன் மூலம் எமது மக்கள் சைவமதத்தின் தத்துவங்களைப் [illegible] வேண்டும் இவ்வாறு [illegible]

திரு. தனபாலன் தமது தலைமையுரையில், வரலாற்றுப் பெருமை மிக்க எமது மதத்தின் வளர்ச்சிக்கு வேதமுரசு உறுதுணையாக விளங்க வேண்டும் என்று கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பேசும் போது கூறியதாவது;

வடக்கையும் - கிழக்கையும் இணைக்கும் பாலமாக வெளிவந்துள்ள வேதமுரசு சஞ்சிகை எமது மதம் பற்றிய அறிவைப் புகட்டும் சஞ்சிகையாக அமைந்து சைவத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும் [illegible] சஞ்சிகையாக வெளிவந்துள்ளது என்றார். (க-111)

உலக வங்கி அதிகாரிகளுடன் பேச

சந்திரிகா வெகுவிரைவில் வெளிநாடு செல்கிறார்!

கொழும்பு, செப். 24

அதிக நிதி உதவியைப் பெறுவதற்காக உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்த ஆகக்குறைந்தது இரு நாட்களாவது பிரதமர் சந்திரிகா வெளிநாடு செல்லக் கூடிய வாய்ப்பு உண்டு இத் தகவலை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

உரமானியம், உணவு முத்திரை, உதவி அதிகரிப்பு, போன்ற நிவாரணங்களை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது பற்றி செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

சந்திரிகா வேட்பாளர்

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய பிரதமர் திருமதி சந்திரிகா குமாரதுங்க போட்டியிடுவார்.

கொழும்பில் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இதனை உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

ஐ.தே.க. சார்பில் காமினி திஸநாயக்கா போட்டியிடுவது தெரிந்ததே. (இ-3)

யாழ். மாவட்டத்துக்கு

புதிய இன விதை நெல் கொழும்பிலிருந்து வருகிறது

யாழ்ப்பாணம், செப். 24

யாழ் மாவட்டத்திற்கு பெரும்போக நெற்செய்கைக்காக இம்முறை முதன் முதலாக புதிய இனத்தைச் சேர்ந்த விதை நெல் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து வந்து சேரவுள்ளது.

பீ. ஜீ- 300 இன வெள்ளை அரிசியை கொண்ட 200 புசல் விதை நெல்லை இம்முறை பரீட்சார்த்தமாக யாழ். மாவட்டத்தில் விதைப்பதற்கே இந்த புதிய நெல் இனத்தை கொழும்பில் இருந்து கொள்வனவு செய்வதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (க-17)

வேலை வாய்ப்பு தகவல் பிரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப் 24

யாழ் பிரதேச செயலக வேலை வாய்ப்பு தகவல் பிரிவுக்கு வேலை தேடி விண்ணப்பிப்போர் காலை 8-30 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம் என்று யாழ். பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. விக்னேஸ்வரமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஒ1-7)

தவஸ எம். டி குணசேன ஏலத்தில்!

கொழும்பு, செப். 24

இலங்கை வங்கிக்கு செலுத்தப்படவேண்டியுள்ள 17 கோடி ரூபாவுக்கு அதிகமான கடனை அறவிடுவதற்காக தவஸ நிறுவனமும் எம். டி. குணசேனா நிறுவனமும் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த நிறுவனங்கள் நான்கு ஆண்டுகளுக்குமுன்னர் பெற்ற கடனும் வங்கி மேலதிகப் பற்றும் வட்டியும் அறவிடப்படுவதற்காக, அந்தநிறுவனத்தின் சொத்துகள், உடைமைகளை ஏலத்தில் விற்பனை செய்யும் பொறுப்பு ஷோக்மன் - சமரவிக்ரம ஏலதார விற்பனை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-எ-6)

தொலைக்கல்வி பயிலுநருக்கு

யாழ்ப்பாணம், செப். 24

தெல்லிப்பளை தொலைக்கல்வி நிலைய சகல பயிலுநருக்கும் இன்று சனிக்கிழமை முழுநேர வகுப்பு நடைபெறும் என்று சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். (•)

புதுக்கோட்டை காங்கிரஸ் எம்.பி. காலமானார்

சென்னை, செப். 24

தமிழ்நாடு, புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியின் இந்திரா காங்கிரஸ் எம்.பி.யான திரு. எம். சந்திரராஜ் நேற்று இருதய நோய் காரணமாக தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

1984 முதல் புதுக்கோட்டை எம்.பியாக அவர் இருந்துவந்தார். (ஒ-எ)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 24

சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாச அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. [ஐ-3]

பண்டத்தரிப்பு வைத்தியசாலை

யாழ்ப்பாணம், செப். 24

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இதுவரை காலமும் இயங்காதிருந்த பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

மக்களின் நலன் கருதி சித்தங்கேணி சந்திக்கு அண்மையில் உள்ள ஒரு கட்டடத்தில் இந்த ஆஸ்பத்திரி இயங்கத் தொடங்கியுள்ளது. (ஒ-க-15)

சாவகச்சேரி
லயன்ஸ் கழகம்
நடத்தும்
வசதிகுறைந்தோருக்கான
கண் சத்திர சிகிச்சை
முகாம் - 3
காலம்:- நாளை ஞாயிறு 25-09-1994
காலை — 7.30 மணி
இடம்:- சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை
சத்றாக் (Cataract) எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள நோயாளர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை கண்சத்திர சிகிச்சை நிபுணர் குழுவினால் சத்திரசிகிச்சை செய்யப்படும்.
லயன்ஸ் கழகம்
சாவகச்சேரி
ஆதரவு வழங்குவோர்,
ஸ்ரீ விக்கினேஸ்வராக் களஞ்சியம்
148, கண்டி வீதி, சாவகச்சேரி
உரிமையாளர்: திரு. S. செல்வரட்ணம்
(சி 9226)

அமரர் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை நினைவஞ்சலி மலர்

(24 - 09 - 1994)



அமரர் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை

சொப்பனமா, தெய்விகமா?

ஊரெழுந்து வந்துவடம் பிடித்திழுக்க
    அழகுருவாய் அசைந்து சனமுன்
தேருருண்டு வரும்! கன்னம் சிலிர்க்கும் எம(து)
    இருகையும் தலைமேற் கூப்பும்
ஆதிசெய் தார்! ஆகா, அற்புதமென்(று)
    உலகம் அதி சயிக்க மாறன்
பேரைநிறுத் திப்போனாய், கேசரியே!
    எம்மையெலாம் பிரிந்தோ போனாய்?

சிற்றுளியால் நான்முகனை, நாமகளை,
    மன்மதனை, ரதியை, விண்ணின்
மற்றுமுள தேவர்களை, கின்னரரை,
    பூதகணத் தோரை - எல்லாம்
பற்பலவா றாகநட மாடவிட்ட
    கலைஞநீ படைத்த வெல்லாம்
சொப்பனமா, தெய்விகமா? கலைமுயற்சி
    பேசத்தொட்ட சிகரம் தானோ?

தேரோடும், யானைவரும், மயிலாடும்,
    கிளிபேசும் குதிரை தாவும்!
போராடும் அரக்கர்களும் நாகர்களும்
    ஆங்காங்கு வருவர் போவர்;
பாரோடு விண்பணிய வீதிவலம்
    வருவானைப் பார்த்துக் கண்கள்
நீருகும்! இவையெல்லாம் நிகழ்த்தியநீ
    இன்றில்லை — நீருகும்கண்!

நாகரமும் வேசரமும் திராவிடமும்
    தேர்ந்த கலை முயற்சி என்ற
யோக நிலை கைவந்த காலமெலாம்
    அதில் நின்ற கலைஞர் கோவே!
தேகம் விழும் வரைகலைகள் வளரும் வழி
    வகைகளெலாம் சிந்தித் தாயே!
யோகமனம் வந்ததும் அத் தேவர்கள் செய்
    புண்ணியமாய்ப் போயிற்றையா!

தேரிருக்கப் பரியிருக்க மணியிருக்கச்
    சிலையிருக்க வடந்தொடுக்க
ஊரிருக்கப் பாராட்ட உலகிருக்க
    கலைத்திறனைச் சம்பா தித்த
பேரிருக்க நிற்பணிகள் பேசுகிற
    நூலிருக்க, பிரிந்தாய்! கட்டும்
நாரிருக்க மலர்போன கதையாக
    நாமிருக்க நேர்ந்த தையா!

— கவிஞர் சோ, பத்மநாதன்

நெஞ்சைப் பிழியும் நினைவுடன் கலாகேசரிக்கு ஒரு கவிதாஞ்சலி

வரிகளாலெழு தாததோர் கவிதைநீ
வஞ்சகம்நிறை யாததோர் நெஞ்சநீ
விரியுமன்பொடு வீசிய காற்றுநீ
வேர்களோடிய பெரிய விருட்சம்நீ
அரியதானதோர் அற்புதக் கலைஞன்நீ
அரங்குபற்பல கண்டதோர் அறிஞன்நீ
எரியும்போது பாள் நின்னரு இன்னலே
என்றதுயரமென் நெஞ்சை எரிக்குதே!

காற்றுநின்பெயர் சொல்லி நார்ந்திடும்
கலைகளியாவுமே நின்முகம் காட்டிடும்
சிற்றுளிகளில் நின்விரல் தோன்றிடும்
இதமுன்மொழி யாகிப் பரவிடும்
ஆற்றல் நின்னடி வாகியே நின்றிடும்
அற்புதங்களோ உனக்கு வழிவிடும்
தோற்று நின்னிடம் சாவு பணிந்திடும்
சொந்தமிக்கவர்கண் ணீரைச் சொரிந்திடும்

அழகிலேறிய மேனியும்; நின்திரு
அதரமேறிய புன்சிரிப் பானதும்
தழலிலேறிய பொன்னொளி உன்முகத்
தவும்! எங்களின் நெஞ்சைப்-
    பிழியுதே?

பழகும்போதுதிர் மழச்சுவை வார்த்தையும்
பரந்தஞானத் தெளிவும் போனதேன்?
அழவும்வாய்வலி ஆற்றல் துடிக்குதே
ஐயனேயுனை என்றினிக் காணுவோம்?

காலிடையினிக் கிடந்திடும் கட்டைகள்
கலைப்பொருட்க ளென்றாயின; நின்வரம்
நூலிடையினி ஓடிய போதினில்
நாகங்களில் ஆயிரம் ஆடின
மேலிடங்களில் நீயிருந் தெங்களின்
மேன்மையைப்பற சாற்றினாய் மன்னவன்
போலிருந்தர சாண்டனை! உன்னுடல்
போயெரிந்ததே, எப்படி ஆறுவோம்?

சிறுவமொன்று அசைவது போனவே
திசைகளெங்குமுன் தேர்கள் அசையுதே
சுருமாயிரம் நின்கர லீலையால்
சோதியாகி உலாவரு கின்றதே
அருவமானவர் யாவரும் உன்றனால்
அழகு மேனியர் ஆயினர்; எங்களின்
கருவமேறிய கலைஞனே! இன்று நீ
காணமாகினாய்; காலமும் ஆகினாய்

- புதுவை இரத்தினதுரை

நீ அருளும் தொழில்கள்

தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர
    மொழிந்திடுதல்; சிந்திப் பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
    கனவுபல காட்டல், கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல், இங் கிவையெல்லாம்
    நீஅருளும் தொழில்க ளன்றோ?

— பாரதியார்.

கலாகேசரி தம்பித்துரையின் தந்தையும் தாயும்

அமரர் கலாகேசரி ஆறுமுகம் - தம்பித்துரை
அவர்களின்
உருவப்பட திரைநீக்கமும்

நினைவஞ்சலிக் கூட்டமும்

இடம்: நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்
காலம்: 24-09-1994 சனிக்கிழமை காலை 9-00 மணி
தலைமை: திரு புதுவை இரத்தினதுரை அவர்கள
(பொறுப்பாளர், கலை, பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)

நிகழ்ச்சிகள்

நாதாஞ்சலி: நாதஸ்வரம்
திரு. K. R சுந்தரமூர்த்தி குழுவினர்
திரு V K [illegible]மூர்த்தி
திரு. V. K. பஞ்சமூர்த்தி } குழுவினர்

நினைவுச் சுடரேற்றல்:
திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்கள்
திரு கோபாலரத்தினம் அவர்கள்

அமரரின் உருவப்பட திரைநீக்கம்:
திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்
(உடுவில் பிரதேச செயலர்)

மலராஞ்சலி,
மௌனாஞ்சலி,
கவிதாஞ்சலி,
கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள்

அஞ்சலியுரைகள்
நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
அர்ச்சகாதுரந்தரி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
நாதஸ்வரவித்துவான் N. K பத்மநாதன் அவர்கள்
திரு. சுந்தரம் டிவகலால அவர்கள்
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
திரு. த பரராஜசிங்கம் அவர்கள்
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்
கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள
கலைப்பேரரசு ஏ ரி. பொன்னுத்துரை அவர்கள்
திரு. சி. வேலாயுதம அவர்கள
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. இரா. சுந்தரலிங்கம அவர்கள்
(முன்னைநாள் கல்விப் பணிப்பாளர்)
திரு. சி. சிவலிங்கராசா அவர்கள்
(முதுநிலை விரிவுரையாளர், யாழ் / பல்கலைக்கழகம்)
திரு. மா. வேதநாதன் அவர்கள்
(விரிவுரையாளர், யாழ் / பல்கலைக்கழகம்)

நன்றியுரை:
அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
சிற்பஜோதி ஆ. ஜீவரத்தினம் (சகோதரன்),
செல்வி த தவவகனி (மகள்),
மற்றும் குடும்பத்தினர்.

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

(விளம்பர இல. சி-9217)

இராணுவத்துக்கு கூடுதல் செலவிடும் நாட்டுக்கு நிதி உதவி வழங்குவதை நிறுத்த வற்புறுத்து

ஆயுதங்களுக்காகவும் இராணுவத்தை நிறுத்துவதற்காகவும் பெரும் பணத்தைச் செலவிடும் வறிய நாடுகள் எதிர்காலத்தில் உதவி பெறுவது சிரமமான செயலாக இருக்கும்.

கல்வி, சுகாதாரம் போன்ற மக்கள் நலன் அடிப்படையான வரவு செலவில் இல்லாமல் இராணுவ நடவடிக்கைக்காக கூடுதல் பணத்தைச் செலவிடும் நாடுகளுக்கு உதவியைக் குறைக்குமாறு அல்லது முற்றாக நிறுத்துமாறு சமீபத்தில் வெளியான ஐ. நா. அறிக்கை ஒன்று நன்கொடை நாடுகளையும் ஸ்தாபனங்களையும் வலியுறுத்தி உள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் இது பேரொழிப்புக்கான ஒரு கனவுக் கோரிக்கை போன்று இருந்திருக்கும். ஆனால் இந்நாட்களில் பெரிய நன்கொடை நாடுகள் கோரிக்கையைச் செவிமடுக்கின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணய சபை போன்ற நிறுவனங்கள் இக்கருத்தினை மனதில் கொண்டுள்ளன என்று அண்மையில் டாக்காவில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் "மனித அபிவிருத்தி அறிக்கை - 94" என்ற நூலைத் தயாரித்த பிரதம ஆசிரியர் மஸ்பூப் உல் ஹக் கூறியுள்ளார்.

இத்தகைய கருத்துக்கள் நிதி, அரசியல் ஆகிய இரண்டு காரணங்களுக்கும் கவர்ச்சிகரமானவையாக அமைந்துள்ளன. உலக உதவி பெறும் நாடுகளின் வரிசை நீண்டு கொண்டே போக உதவி வரவு செலவுத் திட்டமும் பெரும் சிரமங்களுடனேயே தயாரிக்கப்படுகின்றன. கடைசியாக, சுயாட்சி பெற்ற பலஸ்தீன பகுதிகளான மேற்குக் கரையோரமும், காஸா ஆகியனவும் உதவி கோரி நிற்கின்றன.

நன்கொடை நாடுகள் முன்னுரிமை வழங்க வேண்டிய நாடுகளின் பட்டியலை மறுபரிசீலனை செய்து வருகின்றன. உதவியாக வழங்கப்படும் ஒவ்வோர் அமெரிக்க டொலரும் கூடுதல் அபிவிருத்திக்கு செலவிடப்படுவதை உறுதி செய்ய இவை முயற்சி செய்கின்றன.

கெடுபிடி யுத்தம் முடிவடைந்தவுடன் ஆயுதங்களுக்காக அல்லது பாதுகாப்புக்காக உதவித் தொகையைச் செலவிடும் நாடுகள் குறித்து நன்கொடை நாடுகள் பொறுமையைக் கடைப்பிடிக்கத் தயாராக இல்லை என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயச் சபையும் உலக வங்கியும் மாத்திரமல்ல ஜேர்மனி, ஜப்பான், நெதர்லாந்து போன்ற நன்கொடை நாடுகள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி உள்ளன. இது தொடர்பான ஒரு திசைவான [illegible] ஒன்றையும் [illegible] இருக்கின்றன.

உதவி பெறும் நாடுகளின் இராணுவ செலவினத்தையும் சமூக செலவினத்தையும் ஒப்பிட்டுப் பார்க்குமாறு ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிறுவன அறிக்கையில் நன்கொடை நாடுகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. யுத்தச் செலவினம் அதிகரிக்கும் பட்சத்தில் உதவி படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும். ஒரு நாடு அதன் மக்களுக்குச் செலவிடுவதிலும் பார்க்க இராணுவத்துக்கு கூடுதலாகச் செலவிடுமானால் நன்கொடை நாடு அந்த நாட்டுக்கான உதவியை நிறுத்திவிட்டு அதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.

மதிப்பீட்டின்படி, அங்கோலா, ஈராக், எதியோப்பியா, மொஸாம்பிக், பாகிஸ்தான், சோமாலியா, யெமென் [illegible] இந் நாடுகளில் பல யுத்தத்தாலும், வறுமையாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

தலா வருமானத்துக்குப் பதில் இந்நாடுகள் மனித இடர்பாடுகளையே சம்பாதித்துள்ளன.

ஆசியாவில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஆயுத இறக்குமதிக்கு அதிக செலவு

ஆசியாவில், பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் கூடுதல் அழுத்தம் காணப்படுகிறது. இரு நாடுகளுக்கும் வருடாந்தம் ஆயுத இறக்குமதியில் 2,000 கோடி அமெரிக்க டொலரைச் செலவிடுகின்றன. உலக நாடுகளின் மொத்த ஆயுத இறக்குமதியில் இது 1/5 பங்கு ஆகும்.

இரு அயல் நாடுகளிடையே கொந்தளிப்பான நிலைமையே வளர்ந்து வருகிறது. உதாரணமாக இந்தியா அதன் யுத்த செலவினத்தை 82 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது. [illegible] பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பாகிஸ்தான் அதன் இராணுவ செலவினத்தை அதிகரிக்க மாட்டாது. ஏற்கனவே இராணுவ செலவினம் பாகிஸ்தானில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் 30 சதவீதம் அதிகரித்துள்ளது.

உலக மதிப்பீட்டின்படி கைத்தொழில் மய நாடுகள் ஆயுதங்கள் மீதான செலவினத்தைக் குறைத்த போதிலும் மூன்றாவது மண்டல நாடுகளின் இராணுவ செலவினம் அதிகரித்து வருகிறது. 1987 இல் உதாரணமாக வளர்முக நாடுகள் 3,400 கோடி டொலரை ஆயுத இறக்குமதிக்குச் செலவிட்டன. இது இந்நாடுகளின் அரிதான வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்கீட்டின் 3/4 பங்கு ஆகும்.

துணை சஹாரா பிரதேசமான ஆபிரிக்காவில் இராணுவத்துக்காகச் செலவிடப்பட்ட பிராந்திய மொத்த உள்ளூர் உற்பத்தியின் விகிதாசாரம் 1960 ஆம் ஆண்டில் இருந்த 0.7 சதவீதம் 1991 இல் 3.0 சதவீதமாக அதிகரித்தது. கலைக்குரிய அடிப்படை மாற்றங்களைக் கைக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டதால் இந்த நாடுகள் இராணுவத்திலும் பார்க்க சமூகத் திட்டங்களில் செலவினக் குறைப்பு மேற்கொண்டன.

இத்தகைய வறிய நாடுகளில் வலிமை பொருந்திய ஆயுதங்களுக்கான செலவினத்தால் மக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் அதிகம் என்று முன்னாள் பாகிஸ்தான் நிதி அமைச்சர் ஒருவர் கூறுகிறார். மினுங்கும் ஒவ்வொரு ஜெட் விமானத்துக்கான பணத்தில் 10 லட்சத்திலிருந்து 20 லட்சம் வரையிலான சிறுவர்களை ஆரம்ப பாடசாலைக்கு அனுப்ப முடியும். ஒவ்வொரு யுத்த தாங்கியும் 20 லட்சம் பிள்ளைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப் போதுமான பணத்தில் கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஆனால், குற்றம் புரிந்தவர் மீது குற்றம் சுமத்தாமல் பாதிக்கப்பட்டவர் மீது குற்றம் சுமத்துவது போன்ற 1994ஆம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் சில பிரதிநிதிகள் தெரிவித்தார்கள். மூன்றாவது மண்டல நாடுகள் ஆயுதக் கொள்வனவுக்கு பணத்தைச் செலவிடும் செயலுக்கு கைத்தொழில் மய நாடுகளிலுள்ள ஆயுத உற்பத்தியாளர்கள் - விற்பனையாளர்

(5ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நீரிழிவு நோயாளிகள் பாவிக்கக் கூடிய ஆட்டமா, குரக்கன் மா, ஒடியல் மா, உழுந்து மா எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். (சி-9195)

பூச்சாடிகளும், பூங்கன்றுகளும் விற்பனைக்குண்டு. பிளான் பரடைஸ், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (33038)

அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. சாந்தி கஜேந்திரன், கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [33040]

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். வான் கோழிகள், பண்டம் கோழிகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33023]

அலுமினிய சட்டங்களால் ஆன கவர்ச்சிகரமான லவ் சேட்ஸ் கூடும், 24 லவ் சேட்கள், உஷா 2 ஊசி தையல் மெஷின் போமேகா ஒட்டிய 6x3½ சாப்பாட்டு மேசை, 8 கதிரை, 75W சென்வூட் பொக்கட்ஸ் கூடிய 3-in-one A/C சொற் செற்றும் J.V C. 3 Head V. D. O. டெக்கும் உடன் மலிவு விற்பனைக்குள்ளது. தொடர்பு: R. ஈஸ்வரன் நெல்லோறு பகுதி பிள்ளையார் கோவிலடி, கொக்குவில். (7926)

புதுரக [Latest] கடிகாரங்கள் London Boy, Casio, Citizen விற்பனைக்குண்டு. சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். கஜன் வொச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். [7648]

ஆனந்தம் தயாரிப்புகள்

சத்-சித் ஆனந்தம் சந்தான இருக்கும் உண்மை பொருளை எமது சித்தத்தால் அறிந்தால் கிடைப்பது எமக்கு பேரானந்தம். அதுபோல ஆனந்தம் சீயக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாமி அப்பளம் பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள். கேட்டுவாங்குங்கள் ஆனந்தம். [சி-9036]

புறொயிலர் விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி (பஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (33037)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33024]

மணிக்கூடுகள்

உங்கள் பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகத்திற்காக விற்று நீங்கள் விரும்பும் நல்ல நிலையில் உள்ள வேறு மணிக்கூடுகள் மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ளலாம். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஆரியகுளம் சந்தி (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9042)

A/L - 95

A/L 95 பரீட்சைக்கு உதவியாக வெளிவந்து விற்பனையாகின்றது A/L வகுப்புக்குரியது. மனித உயிரியல் (Human Biology) உயர்தர. வினாவிடை (பரீட்சை வழிகாட்டி) ஆக்கம் M. P. Sellavel B. sc. சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீ காந்த் புத்தகசாலை, யாழ். நல்லூர். (இ/9177)

தேவை

ஓரளவு ஆங்கில அறிவுள்ள பெண் விற்பனையாளர்/காசாளர் தேவை. நல்லூர் சுற்றாடலில் வசிப்பவர்கள், சொந்த கையெழுத்தில் எழுதிய விண்ணப்பத்தை மாலை 4-00 — 6-00 நேரில் சமர்ப்பிக்கவும். Nallur Farm Centre மே/பா, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33025]

மனித உயிரியல்-I

கே. டி. அருட்பிரகாசம், கை. என். ஏ. ஜயதுங்க விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [இ-9158]

மணமகள் தேவை

உதயச் செவ்வாய் கார்த்திகை 4ஆம் பாதம், 67இல் பிறந்தவர், இந்துசமயம், பிரான்ஸில் பிரசா உரிமையுடன் தொழில் புரிபவர். பொருத்தமான பெண் சாதகத்துடன் விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். வே. செல்லத்துரை இளைப்பாறிய ஆசிரியர் கோப்பாய் வடக்கு. (7924)

பாவியுங்கள்

அண்ணா பற்பொடி
அண்ணா ரொபிகள்

அண்ணா பற்பொடியின் பாவித்த வெற்றுப் பக்கட்டுகளில் 25 அல்லது நீங்கள் சுவைத்து சாப்பிடும் அண்ணா ரொபிகளின் 50 லேபல்களையோ கொடுத்து 1 அப்பியாசக் கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

● பெற்றுக் கொள்ளுமிடங்கள்:

அண்ணா தொழிலகக் கிளைகள்:
இணுவில், யாழ்ப்பாணம், திருநெல்வேலி.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

[இ-9199]

YOGI HOME SCIENCE ACADEMY

கேக் ஐசிங், மாச்சிவி மலர்கள் ((Sugar Craft) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing) சமையற்கலை (Cookery), ஒப்பனைக்கலையும் தலை அலங்காரமும் (Make up and Hair Dressing) புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

7/B, நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர்.
யாழ்ப்பாணம்

(32995)

அன்பான வேண்டுகோள்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் மகாசபையில் ஆண்டுச் சந்தா அங்கத்தவர்களாக சேர்ந்தவர்கள் தங்கள் 1994/ 1995 ஆண்டுச் சந்தாவை உடன் செலுத்தி அங்கத்துவத்தைத் தொடரும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி:

சி. ஜெயபாலசிங்கம்,
செயலாளர்.

ஆலய பரிபாலனசபை: (33011)

---

16 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கலாகேசரி
ஆ. தம்பித்துரை

கலாகேசரிப் பட்டம் தந்தோம் அன்று!

தங்கள் பிரிவால் துயருறும் தங்கள் குடும்பத்துடன் தங்கள் ஆத்ம சாந்திக்காக, அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம் இன்று!!

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபை.

(33012)

3ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்:
17
—
07
—
1941

இறைவன் அடியில்:
28
—
09
—
1991

அமரர் நடராஜா சண்முகநாதன்

திதி: 24 — 09 — 1994

ஆண்டு மூன்றானதுவோ
ஈண்டு எமை நீ பிரிந்து
மீண்டு வர முடியாது
யாண்டும் எம் நெஞ்சில் இருப்பீர்!

உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திக்கும்!

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

227, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(33089)

உ
சிவமயம்
சாவகச்சேரி

அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
மகா சண்டிஹோம அழைப்பு

அன்புடையீர்!
மேலே குறிப்பிட்டுள்ள சண்டிஹோமம் சென்ற வருடத்திலும் பார்க்க வெகுசிறப்பாக நடைபெறும்.

28-09-94 முதல் **30-09-94** வரை புதன், வியாழன், வெள்ளி நாட்களில் கணபதிஹோமம், நவக்கிரகஹோமம், துர்க்காஹோமம், சண்டிஹோமம் என்பன தொடர்ந்து 3நாட்கள் நடைபெறும்

இந்த உபயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கூடிய விரைவில் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும், அடியார்கள் அனைவரும் மூன்று நாட்களும் தொடர்ந்து காலை, மாலை பங்குபற்றி, மூன்றாம் நாளாகிய வெள்ளிக் கிழமை காலை ஆயிரத்தெட்டு பால்செம்பு எடுத்து அம்பிகைக்கு பால் அபிஷேகம் செய்ய உதவுக

இவ்வேள்வி சிறப்பாக நடைபெற அடியார்கள் தேவையான நிதியுதவி, தானியவகை, சமித்துவகை, கற்பூரம், தேங்காய்எண்ணெய், பால், தயிர், பழவகை, பன்னீர், இளநீர், கரும்பு, சொர்ணபூ பூமாலை என்பன கொடுத்துதவி சரீரத் தொண்டுகள் புரிந்து அன்னை துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு:
சங்கற்பம் செய்ய விரும்புவோர் பெயர், நட்சத்திரத்துடன் பதிவு செய்க.
யாகநூலும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ப, மஹாகணபதி சர்மா.
(தர்மகர்த்தா)

[33020]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(94 பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கானது)

95 DAY CLASS

புதிய பிரிவு 30-09-1994
8-00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

பொருளியல் — திரு. கலாகரன்
கணக்கியல் — திரு. S K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. வரதன்
அளவையியல் — திரு. விக்கி. திரு. பிரபா
இந்து நாகரிகம்
இந்து சமயம்]— திரு. சாவை. சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. குணராஜா
அரசியல் — திரு. சிவன்
வரலாறு — திரு. சிறீதரன்
கிறிஸ்தவம் — திரு. தனேஸ்

வாரத்தில் 6 மணித்தியாலம் நடைபெறும்

அனுமதிகளை முன் கூட்டியே
பெற்றுக் கொள்ளவும்

[இ-9355]

31ஆம் நாள் நினைவும் நிகழ்வும்

ம
—
றை
—
வு

25
—
08
—
1994

உயர்திரு கந்தையா சிவலிங்கம்

(மன்னார், யாழ்ப்பாண உள்ளூராட்சி திணைக்கள முன்னாள் லிகிதர்)

திதி: அபரபட்ச சதுர்த்தி

எங்கள் இனிய இளவரசே உங்களுடன் வாழ்ந்த மகிழ்ச்சிகரமான நாட்களை இரை மீட்கிறோம். உங்கள் ஆன்மா என்றும் எங்களை வழிப்படுத்தும், எங்கள் நினைவு உள்ள வரை அந்நினைவில் நிலைப்பீர்கள்.

அன்னாரின் சபிண்டீகரணம் 59, The Wood Lond's, Heilter Street, London S.E 13 இல் இன்று (24 - 09 - 1994) நடைபெறும் அதே தினம் இங்கு சண்டிலிப்பாய் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் அபிஷேக ஆராதனையும் மோட்ச விளக்கேற்றலும் மகேஸ்வர பூசையும் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

க. நித்தியானந்தன்
(சகோதரன்)

திருமதி புஸ்பராணி சிவலிங்கம்,
பிள்ளைகள், மருமகன்,
பேர்த்தி.

[33046]

பதவியில் இருந்து ஜனாதிபதி வெளியேற்றப்பட வேண்டும்!

அமைச்சர் லஷ்மன் தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

தேர்தல் வாக்குறுதிகளை பூரணமாக நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி பதவியில் இருந்து திரு. விஜேதுங்கா வெளியேற்றப்படவேண்டும். அமைச்சர் லஷ்மன் ஜெயக்கொடி முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அமைச்சரவைக் கூட்டத்திற்கு வெளியார் ஒருவர் தலைமை வகிக்கும் நிலை இன்று உள்ளது. இதனால் அமைச்சரவைக் கூட்டத்தில் மனம் விட்டு பேச முடியாது உள்ளது. இரகசியங்களை பாதுகாக்க முடியாமலும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ—எ)

அரசாங்க வைபவங்களை சிக்கனமாக நடத்த முடிவு

கொழும்பு, செப். 24

அரசாங்க வைபவங்களை சிக்கனமான முறையில் நடத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. செலவைக்குறைப்பதுதான் இதன் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தலைமையில் எட்டு அமைச்சர்கள் அடங்கிய உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. சுதந்திரதினம் குடியரசுதினம் உட்பட அரச வைபவங்களை எப்படி நடத்துவது என்பது பற்றி இக்குழு அரசுக்குச் சிபார்சு செய்யும். (ஐ-எ)

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95 DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரிய வகுப்பு)

பொருளியல் — எஸ். வரதராஜன்
வர்த்தகம் — பசீல்
கணக்கியல் — சௌந்தி
அளவையியல் — எஸ். எஸ். மனோகரன்
தமிழ் — திருமதி மீரா
இந்துநாகரிகம் — பாலா
புவியியல் — சேரன்
அரசியல் — பஞ்சாட்சரம்
கிறிஸ்தவம் — நிரஞ்சன்

ஆரம்பம்: 29-09-1994
வியாழன் 8 a.m.

[இ-9189]

மாதாந்த அறிவியல் அரங்கு - 7

நாளை **25 — 09 — 1994** ஞாயிறு மாலை 3 மணி

இடம்:
உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

தலைப்பு:
"உயர் இரத்த அழுத்தம்"

நிகழ்த்துபவர்:
டாக்டர் T. W. ஜெயலகுராசா
M. B. B. S. (Cey.)
அவர்கள்
(வைத்திய அத்தியட்சகர்,
தனியார் வைத்தியசாலை - யாழ்ப்பாணம்)

அறிவுத் தேடல் மிக்கோர் வருக!

- நூலக அபிவிருத்திச் சபை.

பிரதேச சபை பொது நூலகம்,
உசன் - மிருசுவில்.

விளம்பர அன்பளிப்பு!
வினோ புடைவையகம்
கண்டி வீதி, மீசாலை.

[33041]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
22
—
11
—
1963

மறைவு:
05
—
10
—
1993

திருமதி மனோகரி தனநாயகம்

(இந்திரா)

திதி: 24 — 09 — 1994

நல்லையம் பதியில் வாழ்ந்த திருமகளே!
தில்லைப் பரம் சோதி பாதம் சேர்ந்து
பன்னிரு திங்கள் கடந்தனவோ,
எண்ணுகின்றோம் உங்கள் நினைவலைகளை.

திங்கள் பல நூறு தான் விடிந்தாலும்
தினங்கள் பலதான் கடந்தாலும்
அழியாத ஓவியமாய்
கலையாத காவியமாய்
நிலைத்திருப்பீர் எங்கள் நினைவில்
உறைந்திருப்பீர் எங்கள் உள்ளத்தில்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

அன்புக் கணவர்;
மற்றும் குடும்பத்தினர்.

217, கல்வளை,
மல்லாகம்.

(7652)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

வாய்ப்பந்தல் வேண்டாம்!

எத்தகைய தடை ஏற்படினும், இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சியை அரசாங்கம் ஒருபோதும் இடைநடுவில் கைவிடாது. சமாதான முயற்சியை மேற்கொள்வதில் அரசு மிகவும் உறுதியாக உள்ளது. தகவல்துறை அமைச்சர் திரு. தர்மசிறி சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தகவல்துறை அமைச்சரின் அறிவிப்பு, அவரது சொந்தக் கருத்தல்ல. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு; அரசாங்கத்தின் முடிவு. அரசின் இந்த முடிவு இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதில் அதற்கு அக்கறை உண்டு என்று எடுத்துக் காட்டுவது உண்மைதான்.

ஆனால் இந்த அக்கறை வெறும் பேரளவில் இருப்பதில் பயனில்லை. அக்கறையை நிரூபிப்பதற்கான, சான்று பகரக்கூடிய செயற்பாட்டைக் காணோம். இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்ப்பது என்பது அரசாங்கத்தின் முடிந்த முடிவு என்றால், அதனை முன்னெடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயக்கம் காட்டுவது ஏன்? இந்தத் தயக்கம் சந்தேகத்தையே தரும்.

பேச்சுவார்த்தை எப்போதும் சுமுகமான சூழ்நிலையில் நடக்கவேண்டும். பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் மோதிக்கொண்டு பேசுவது எப்படி? எனவே மோதலை நிறுத்தி சுமுக நிலையை எய்துவதற்கு இங்கே போர் நிறுத்தம் முதன்மைத் தேவை.

விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் இருப்பதால் தான் பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருக்கிறார்கள். போர் நிறுத்தம் செய்தால் அதனைப் பயன்படுத்தி தம்மை பலப்படுத்திக்கொள்வார்கள். எனவே போர் நிறுத்தம் இல்லாமலே பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்று அரசாங்கம் எண்ணுமானால் சமாதானத்தைத் தொலைவில் காண்பதும் சாத்தியமற்றதாகிவிடும்.

போர் நிறுத்தம் செய்வதால் அரசாங்கத்திற்கு எவ்வித நட்டமோ, பின்னடைவோ உண்டாகப் போவதில்லை. போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தால் அரசாங்கப் படையினர் தாம் இப்போதுள்ள நிலையிலேயே இருப்பார்கள். பின்நோக்கிச் செல்லப்போவதில்லை. இதுவரை கஷ்டப்பட்டுப் பிடித்த பிரதேசத்தை இழப்பது என்ற பேச்சுக்கு இடமில்லை.

அரச படைகள் இதுவரை ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருந்து வெளியேறுவது என்பது, பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் இறுதிக்கட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் ஒன்றாக இருக்கும். ஆகையால் போர் நிறுத்தம் என்றதும் படையினரும், அரசும் கவலை அடையத் தேவையில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசுக்கு உளமார்ந்த, உறுதியான நிலைப்பாடு உண்டென்றால், அது போர் நிறுத்தத்துக்கு வகை செய்ய வேண்டும். போர் நிறுத்தம் வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறுவதனை ஒரு நிபந்தனையாகக் கருதக்கூடாது.

பொருளாதாரத் தடைத் தளர்வு, வடபகுதிக்கு மின்சாரம் வழங்கும் முடிவு என்பன எவராலும் நிபந்தனையாக விதிக்கப்படாமலே அரசாங்கம் தானாக அறிவித்தவை.

வடபகுதி மக்களையும் இந்நாட்டின் குடிமக்கள் எனக் கருதி அவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் முகமாகவே அரசு தானாகவே அந்த முடிவுகளுக்கு வந்ததாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு. அனுருத்த ரத்வத்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

போர் நிறுத்தம் இல்லாவிடில் அதனால் பாதிக்கப்படுவர்கள் தமிழ் மக்களே. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, அரசாங்கம் தானாகவே போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். அப்போது தான் பேச்சுவார்த்தையில் அதற்கு அக்கறை உண்டு என்பதனை நிரூபிக்க முடியும். வெறும் வாய்ப்பந்தல் போடுவதால் எந்தவித பயனும் எமக்கு வராது.

இலட்சியப் புருஷன் திலீபனை நினைவு கூர அணி திரள்வோம்

மாவீரர் பணிமனை அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 24

தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகளில் அனைவரையும் அணிதிரண்டு கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மாவீரர் பணிமனை பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாவீரர் பணிமனை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

திலீபன் ஒரு யுக புருஷன்! ஈழ மண்ணில் முழங்கிய ஒரு புரட்சி இடி! அதன் எதிரொலி இன்று உலகெங்கும் எதிரொலிக்கின்றது.

ஓர் உயர்ந்த இலட்சியத்திற்காக உண்ணா நோன்பிருந்து, நோன்பிருந்த நேரம்தொட்டு ஈகச்சாவைத் தழுவிக் கொள்ளும்வரை ஒரு துளி நீர்கூட அருந்தாமல் மறைந்த அந்தக் கர்மயோகியின் உறுதியையும், வீரத்தையும் உலக சாதனைப் புத்தகங்களும், வரலாற்றுச் சுவடிகளும் பதிவு செய்து கொண்டிருக்கின்றன.

நாம் ஓர் இந்திய இராணுவ சிப்பாய்க்கு எதிராகத் துப்பாக்கியைத் தூக்கினால் இந்திய மக்களின் மனம் புண்பட்டுவிடும் என்பதற்காக திலீபன் இந்திய அரசுடன் அஹிம்சையில் பேசினான்.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து 15-09-87 தொடக்கம் 26-09-87 வரை நீரருந்தாது உண்ணா நோன்பை நோற்று எந்தவொரு கோரிக்கையும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே 26-09-87 அன்று திலீபன் ஈகச் சாவைத் தழுவிக் கொண்டான்.

தமிழ் பேசும் மக்கள் ஓர் அவல வாழ்வு வாழக்கூடாது என்பதற்காக தன்னையே மெழுகுவர்த்தியாக உருக்கிய தியாகச் சுடரை நினைவு கொள்ளும் இந் நாட்களில் வீதியெங்கும் அலங்கரித்து வீடுகள்தோறும் பந்தலிட்டு அவனது உருவப்படம் வைத்து, விளக்கேற்றி, மலர் வைத்து, மாலை சூட்டி அஞ்சலி செலுத்துவோம்.

திலீபன் நினைவாக நடைபெறும் சிரமதானங்களில் கலந்து கொண்டு சிறப்பித்து இந் நாட்களில் வட்டாரீதியாக நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகளிலும், கலை நிகழ்ச்சிகளிலும் எழுச்சியுடன் கலந்து கொண்டு இறுதி நாளில் கோட்டரீதியாக நடைபெறும் உண்ணாவிரத நிகழ்ச்சியிலும், நினைவு வீரவணக்கக் கூட்டத்திலும் அனைவரும் அணிதிரண்டு கலந்து கொள்வோம்.

"எம் மக்கள் அனைவரும் எழுச்சியுடையவர்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது" என்ற அவனது கூற்றை மெய்ப்பித்து நின்று அவனது இலட்சியத்தை நிறைவேற்றுவோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ஈ)

இலங்கை தேயிலையில் ஆர்ஸனிக் நஞ்சு கலப்பு?

ஜேர்மன் அதிகாரிகள் உஷார்

கொழும்பு, செப். 24

இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையில் ஆர்ஸனிக் நஞ்சு கலக்கப்படும் என்று தமிழ்க்குழு ஒன்று பயமுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து ஜேர்மன் சுகாதார அதிகாரிகளை ஐரோப்பிய சமூக அமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலை முழுவதும் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்று ஜேர்மன் அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

ஜேர்மனியில் இருந்து கொழும்புக்குக் கிடைத்த தகவலின்படி — இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை மற்றும் கப்பலில் வந்து கொண்டிருக்கும் தேயிலை அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கப்பலில் கொள்கலன் ஒன்றில் அனுப்பப்பட்ட இலங்கைத் தேயிலை ஜேர்மன் துறைமுகம் ஒன்றின் களஞ்சியத்தில் சீல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

லலித் அமைச்சராக இருந்த வேளை

ஸ்ரீமனி ஆரம்பித்து வைத்த கப்பலே 'சாகரவர்த்தனா'

கொழும்பு, செப். 24

கற்பிட்டிக் கடலில் கடற்புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் அழிக்கப்பட்ட "சாகரவர்த்தனா" என்ற கடற்படைக் கப்பல் 1984 ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி முதல் தடவையாக கடலில் மிதக்கவிடப்பட்டது.

அப்போது தேசியப் பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத்முதலி இருந்தார். அவரது மனைவி ஸ்ரீமனி அத்துலத்முதலியே கப்பலை மிதக்க விடும் நிகழ்ச்சியை ஆங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார்.

இக்கப்பலை கொழும்பு டொக்யார்ட் பிறைவேற் நிறுவனம் கட்டி 4-06-1984 இல் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைத்தது. 40 மீற்றர் நீளமும் 7 மீற்றர் அகலமும் கொண்ட இக்கப்பலில் சீன தயாரிப்பான 25 மி.மி. துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன.

கடந்த திங்கள் நள்ளிரவு இக்கப்பலை தாக்கிய கடற்புலிகள், கப்பலில் இருந்த ஆயுதங்களையும் வெடிப்பொருள்களையும் கைப்பற்றி எடுத்துச் சென்றனர் என்பதை இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். (ஓ-எ)

ஆஸ்பத்திரிகளின் பாதுகாப்பு மீண்டும் ஊழியர்களிடம்

கொழும்பு, செப். 24

அரச ஆஸ்பத்திரிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தனியார் பாதுகாப்பு சேவை நடைமுறையை நீக்கிவிட்டு, ஆஸ்பத்திரி ஊழியர்களை பாதுகாப்புக் கடமையில் மீண்டும் ஈடுபடுத்துவது என்று சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, அரசு ஆஸ்பத்திரிகளில் தற்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பாதுகாப்பு ஊழியர்களில் 50 சதவிகிதத்தினர் எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் நீக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஆஸ்பத்திரிகளில் காவலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கையில் தனியார் பாதுகாப்புச் சேவையை இதற்குப் பயன்படுத்துவது அரச நிதியை விரயம் செய்வதாகும் என்று அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி தெரிவித்தார். (எ-6)

ஜிப்சம் உரம்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சமாசத்திற்கு 15 தொன் ஜிப்சம் உரம் வந்து சேர்ந்துள்ளது. (க-17)

புலிகளின் குரல் வானொலியில்

24 – 09 – 1994
சனி இரவு
★ 8-01 — தியாகதீபம் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — குலேந்திரன் எழுதிய "தமிழீழப் பயணத்தில் திலீபன்"
★ 8-25 — நேயர் கடிதங்கள்
8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் — நகிஷ்ணா எழுதிய "புலரும் தமிழீழம்"

25 – 09 – 1994
ஞாயிறு காலை
★ 7-02—மாவீரர் வணக்கம்
★ 7-15—களத்தில் மலர்ந்தவை
★ 7-30—செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தியாகதீபம் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நகோகுலன் எழுதிய "சத்தியப் போரில் திலீபன்"

18 நகரங்களில் மைதானங்கள்

கொழும்பு, செப் 24

விளையாட்டுத்துறை அமைச்சு 18 நகரங்களில் புதிய விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறது.

விளையாட்டுத்துறை அமைச்சின் உதவியுடன் அவ்வப் பகுதி மாநகரசபைகள் இம் மைதானங்களை அமைக்கும்

அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி, செப்.24

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் இயங்கிவந்த தென்மராட்சிப் பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகம் டச்சு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது [க-117]

அம்புலன்ஸ் மீண்டும் சேவையில்

தென்மராட்சி, செப். 24

இரண்டு மாதகாலமாக பழுதடைந்த நிலையில் இருந்த சாவகச்சேரி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் மீண்டும் சேவையில் ஈடுபட்டு வருகிறது (இ-எ-117)

நட்டஈடு துரிதம்

கொழும்பு, செப். 24

கடந்த ஐ.தே.க. அரசின் கீழ் பாரதூரமான முறையில் உடல் ரீதியான துன்புறுத்தலுக்காளானவர்களுக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் நட்டஈடு வழங்கப்படுவதைத் துரிதப்படுத்துவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லயன் கழக தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 24

1992/93 ஆம் ஆண்டுக்கான சர்வதேச லயன்கழகத்தின் சிறந்த தலைவருக்கான பதக்கம் லயன். வ. பரமசிவத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் நடந்த வைபவம் ஒன்றில் யாழ் அரச அதிபர் திரு: கா. மாணிக்கவாசகர் அந்தப் பதக்கத்தை அவருக்கு சூட்டிக் கௌரவித்தார்.

ரூ 1,500 வழங்கும் திட்டம் விரைவில் அமுலுக்கு வரும்

பிரதமர் சந்திரிகா மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, செப். 24

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கும் மாதாந்தம் ஆயிரத்து500 ரூபா வழங்கும் திட்டம் விரைவில் அமுல் செய்யப்படும்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க முன்னணி தலைவல அரச நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் வெளியிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி வழங்கிய தேர்தல் கால உறுதி மொழிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். (ஓ-எ)

கைதடி இல்லத்தில் நடக்கும் சர்வதேச முதியோர் வாரம்

தென்மராட்சி, செப். 24

சர்வதேச முதியோர் வாரத்தை யொட்டி தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் சமூக சேவைப் பிரிவுடன் இணைந்து கைதடி முதியோர் இல்லத்தில் எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி முதல் ஏழாம் திகதிவரை முதியோர் எழுச்சி வாரமாக கொண்டாடவுள்ளனர்.

இவ் வாரத்தில் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களிடையே சமயப் போட்டி, கலை, கலாசாரப் போட்டி, சுகாதாரப்போட்டி, விளையாட்டுப் போட்டி போன்றவை நடைபெறவுள்ளன.

பிரதேச செயலக ஊழியர்களும் தென்மராட்சிப்பகுதியில் உள்ள பொது நிறுவனப் பிரதிநிதிகளும் இணைந்து அந்த வாரத்தில் ஒரு நாள் முதியோர் இல்லத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளவுள்ளனர்.

விழாவின் இறுதிநாளான அக்டோபர் ஏழாம் திகதி நடைபெறும் விழாவில் போட்டிகளில் கலந்துகொண்ட முதியோர்கள் கௌரவிக்கப்பட்டு, பாராட்டுக்களும் பரிசில்களும் வழங்கப்படும். [ஓ-117]

பல்கலைக்கழக அனுமதி: மேன்முறையீடு செய்யலாம்

கொழும்பு, செப். 24

1993/94 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறக்கூடிய தகுதியிருந்தும் அனுமதி பெறாதவர்கள் வழமைபோல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் விசேட குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்

உரிய தகுதியில்லாமல் எவராவது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றிருந்தால் அது பற்றியும் இவ் விசேட குழுவுக்கு அறிவிக்கலாம்.

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவோர்களின் பெயர், விபரங்கள் பேராதனை, கொழும்பு, களனி, ஸ்ரீ ஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், ருஹுணு, மட்டக்களப்பு உட்பட சகல பல்கலைக்கழக பதிவாளர்களிடமும் பெற்றுக் கொள்ள முடியும்.

தகுதியிருந்தும் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களுக்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும். அத்தோடு பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாம் தெரிவு செய்த கற்கைத் துறைக்கெல்லாமல் வேறு துறைகளுக்குச் சேர்க்கப்பட்ட மாணவர்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை பல்கலைக்கழக அனுமதி விசேடக் குழுச் செயலாளர், 20 வார்ட் பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். (எ)

பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப். 24

உடல் முழுவதும் எரிந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் வியாழனன்று அங்கு மரணமானார்.

கரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சர்வானந்தம் இந்நந்தினி (வயது 17) என்ற பெண்ணே மரணமானவர் ஆவார். [க-15]

இராணுவத்திற்கு......

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களும் பொறுப்பாளிகளாவர் என்று இந்திய பத்திரிகையாளர் கனிக் செத்தி கூறினார்.

சூழல் பாதுகாப்பு, மனித உரிமை பேணல், தொழிலாளர் உரிமை பேணல் போன்ற நிபந்தனைகளை பொருளாதார நிபந்தனைகளாக உதவி வழங்கும் நாடுகளும் ஸ்தாபனங்களும் முன்வைப்பது குறித்தும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

சில நன்கொடையாளர்கள் இணக்கம் தெரிவிக்கிறார்கள். அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் மனிலாவில் பேட்டி ஒன்றின்போது தெரிவித்ததாவது:

"உலகெங்கும் அதிகமான யுத்த செலவினம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு நாட்டுக்கும் இதுதான் மேலதிக தொகை என்ற ஒரு வரையறை விதிப்பது நீதியானது"

ஆயுத உற்பத்தியாளர்களும் அவர்களது அரசாங்கங்களும் வளர்முக நாடுகளுக்கு அதீத மீறிய ஆயுத விற்பனையை மேற்கொள்கிறார்கள் என்று உல் ஹக் கூறுகிறார். கைத்தொழில் மயநாடுகளில் வீழ்ச்சியடையும் விற்பனையைச் சமாளிக்க இவர்கள் ஆப்கானிஸ்தான், ருவாண்டா போன்ற மிகமோசமான யுத்தம் நடைபெறும் நாடுகளுக்கு அடிக்கடி ஆயுதங்களை விற்பனை செய்கிறார்கள் என்கிறார் இவர்.

ஆகவே, உலக ஆயுதப் பகிஷ்கரணத்தின் அடுத்த கட்டம் மூன்றாவது மண்டல நாடுகளில் அமுல் செய்யப்படவேண்டும் என்றும் உல் ஹக் கூறுகிறார்.

இது வெறும் ஆயுதப் பகிஷ்கரணம் மாத்திரம் அல்ல; ஆனால் யுத்த ஒழிப்பு நடவடிக்கையும் என்றும் உல் ஹக் குறிப்பிடுகிறார்.

— ஐ.பி.எஸ்

நாவலர், சேர். பொன். இராமநாதன் வரிசையில்

தமிழும் சைவமும் வளர சேவை புரிந்தவர் குருசாமி

அஞ்சலிக் கூட்டத்தில் உரை

கொக்குவில், செப். 24

"தமிழையும், சைவத்தையும் போற்றிப் பாதுகாத்த நாவலர், சேர். பொன் இராமநாதன் ஆகியோரின் வரிசையில் குமாரசாமிப் புலவரும் அவரின் புதல்வரான குருசாமியும் தமிழுக்கும், சைவத்துக்கும் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர்."

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் நடந்த அமரர் குமாரசாமிப் புலவர் குருசாமியின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அதிபர் திரு. க. பழனிவேல் பிள்ளை தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் அமரர் குருசாமியின் திருவுருவப்படம் வைத்தியகலாநிதி பொ. சொர்ணலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது.

நினைவு மலரை வெளியிட்டு உரையாற்றிய கலாநிதி க. கனகராசா அவர்கள் தமது உரையில் —

"ஒரு நாட்டின் அறிவாளிகளே அந்நாட்டின் சொத்துக்கள், அவர்கள் வாழும் போதும் மதிக்கப்பட வேண்டும்; இறந்த பின்பும் மதிக்கப்பட வேண்டும். அந்த வகையில் இந்த விழாவை ஏற்பாடு செய்த அமைப்பாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்" — என்றார்.

ஆசிரியமணி எம்.எஸ் ஸ்ரீதயாளன் தனது அஞ்சலி உரையில் கூறியதாவது:-

தமிழும் சைவமும் வளர வேண்டுமென 1922ஆம் ஆண்டிலிருந்து, கொக்குவில் குமாரசாமிப் புலவர் கடுமையாக உழைத்து [illegible] யும், சைவமும், தமிழும் வளர தம்மை அர்ப்பணித்து சேவை செய்தார். சைவப்பிரசங்கம் செய்பவர்கள் பண்ணொடு பஞ்சபுராணங்களை ஓதக்கூடியவர்களாக இருக்க வேண்டுமென அவர் அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார், — என்றார்.

நல்லை ஆதீன முதல்வரும் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

உடுவில் சிவஞானப் பிள்ளையவர் ஆதீனகர்த்தாவும் சிவஞான [வாரிய]த் தலைவருமான பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமிசர்மா, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு மு. திருஞானசம்பந்தபிள்ளை, நாவலியூர் திரு நா. சச்சிதானந்தம் ஆகியோரும் அஞ்சலி உரையாற்றினர்.

நினைவுமலரினை கலாநிதி க. கனகராசா வெளியிட்டு வைக்க, குருசாமியின் குடும்ப உறவினர்களான திரு எஸ், [illegible] திரு எஸ். நடராசா [illegible] பெற்றுக்கொண்டனர் (ஐ-69)

தியாகத்தின் சுவடுகள்



ஊரெழுவில் வந்துதித்த
பாரிபுகழும் பார்த்திபனே
பாரதத்தின் சதியால் - நீ
பரலோகம் சென்றுவிட்டாய்

நல்லை நகர் வீதியிலே
நல்லதொரு தவமிருந்தாய்
நற்றமிழர் யாவருமே
கண்ணீர்ப் பூ சொரிந்திருந்தார்
நனைந்திட்ட பூஞ்சிட்டாய்
உன் இலட்சியப் பிடிப்பால்
அறிவில்லை அண்ணா நீ
பிரிகின்றாய் என்று

நீரிழப்பால் உன் உடல்
நீர்க்கலன் தொகுதியானது
நரம்பு முனைகளெல்லாம்
சுண்டிச் சுண்டி இழுக்க
ஓவியமாய் சிரித்தாயே - ஈழத்தின்
காவியமாய் ஆனாயே

கதறல்கள் கூக்குரல்கள்
அண்ணா...... இளையவரிடமிருந்து
மகனே...... அன்னையரிடமிருந்து
நண்பா...... தோழரிடமிருந்து
திலீபா...... தலைவனிடமிருந்து
எல்லோரும் வருந்தியழைக்க
காலன் உன்னை விரும்பி அழைத்தான்

காலனுடன் நீ கைகோர்த்த போது
கண்முன்னே கண்டோம் - உன்
உயிர் மூச்சின் பிரதிபலிப்பை
அன்று நீ வைத்த புரட்சித் தீ
இன்றும் எம் மனதில் கனக்கின்றது

ஏழாண்டு காலத்துள்
உன் உயிர் விதை பெரு விருட்சமாய்
உன் கனவுகள் அதன் கனிகளாய்
உன்சகதோழரின் குருதி நீர்
ஊட்டத்தினால்
விடுதலைப் பயிர் பசுமையாய்
தெரிகிறதே

தாயக விடிவையே தாரக மந்திரமாக்கி
தணியா சுதந்திர தாகத்துடன்
விண்ணகம்
சென்றுவிட்ட வேங்கையே அண்ணா
திலீபா!

காலத்தை நாம் வீணாக்கவில்லை
சுதந்திரப் பறவைகளாய்
நீ வளர்த்தவர்கள்
இன்று உயிராயுதமாய்
எங்கள் கரங்களில் உந்தன் கனவுகள்
எங்கள் நெஞ்சினில் உன் அஞ்சலிப்
பூக்கள்
உன் சுவடுகளில் எம் பாதங்கள்

சங்கரி, அஜித்தா,
ஜக்குலின்.
(பெண் கடற்புலிப் போராளிகள்)

சுன்னாகம் பனை, தென்னை வள

அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

பதவி வெற்றிடம்

கீழ்காணும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 'பொது முகாமையாளர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், சூரிய குமார் வீதி, உடுவில் வடக்கு, சுன்னாகம்' என்ற முகவரிக்கு 1994 - 10 - 05 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

பதவி: 306-8 காசாளர்: 306/10

சம்பள அளவுத்திட்டம்: $\frac{1045 - 1705}{40 \times 4 - 50 \times 10}$ இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

தகைமைகள்:

கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் காசாளர் அல்லது விற்பனையாளர் பதவிகளில் 3 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம், அல்லது இதை ஒத்த கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உ/த] க. பொ. த. (உ/த) 3 பாடங்களுக்கு குறையாத சித்தியுடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் காசாளர்/ விற்பனையாளர் பதவிகளில் 6 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 20 — 40

பதவி: 209-8

மேற்பார்வையாளர் 209/10

சம்பளத் திட்டம்: $\frac{1005 - 1705}{40 \times 5 - 50 \times 10}$ இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

தகைமைகள்:

இளை முகாமையாளர் தரத்தில் கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (சா/த) க. பொ. த. (சா/த) பரீட்சையில் கணிதம்/வர்த்தக கணிதத்துடன் தமிழ் மொழி உட்பட 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்று இருப்பதுடன் இதே துறையில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 20 — 40 வருடங்கள்

பதவி: 315-14

தற்காலிக காவலாளி 315/16

சம்பள அளவுத்திட்டம்: $\frac{700 - 950}{15 \times 10 - 20 \times 5}$ அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

தகைமைகள்:

15 ஆவது சம்பளத் திட்டத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம் உடைய கூட்டுறவுப்பணியாளர்.

அல்லது

பூரண ஆரோக்கியத்துடன் 5 ஆம் வகுப்பு சித்தி பெற்றவரும்

வயதெல்லை 20 — 40 வருடங்கள்

★ சங்கப் பணியாளர்களுக்கும், சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இங்ஙனம்
பொது முகாமையாளர்

[சி/5728]

31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:
26 — 12 — 1930

மறைவு:
25 — 08 — 1994

திருமதி மகாலட்சுமி கனகரத்தினம்

நெருப்பினைத் தின்று தின்று
கனிகளைத் தந்தவள்! தன்
குடலைக் குறுக்கி - எம்
உடலை வளர்த்தவள்
தன் வாயினைக் கட்டி
எமக்கூட்டி
நோயினில் வீழ்ந்தவள் - இத்தனை நாளும்
உறவினைக் கூட்டி
கட்டிக் காத்தவள்!
போயினள்! போயினள்!
அன்னையே மறவோம்! மறவோம்.

அன்னார் நோயுற்றவேளை துணையாக நின்றும் மறைந்தபோது ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு எம் துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி/9227)

ஐ. நா. பொதுச்சபை கூட்டத்துக்கு செல்கிறார் அமைச்சர் கதிர்காமர்

திங்களன்று அவர் பேசுவார்

கொழும்பு, செப். 24

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் ஆரம்பிக்கவிருக்கும் ஐ. நா. பொதுச்சபையின் 49 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக உயர் நிலை தூதுக்குழு ஒன்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் புறப்பட்டுள்ளது.

ஐ. நா. பொதுச்சபை விவாதம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் போது அமைச்சர் கதிர்காமர் அங்கு உரையாற்றுவார்.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன், ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின், பிரேசில் ஜனாதிபதி பிறாங்கோ, மெக்ஸிக்கோ ஜனாதிபதி காலோஸ் பொட்டாரி உட்பட பல நாடுகளின் தலைவர்கள் அன்றைய தினம் உரையாற்ற இருக்கின்றார்.

நியூயோர்க்கில் ஒரு வாரம் தங்கியிருக்கும் போது அமைச்சர் கதிர்காமர், ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, யு.என்.டி.பி. யுனிசெவ் அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் ஐ. நா. அதிகாரிகள் ஆகியோரை சந்திப்பார்.

சார்க் அமைப்பு பிரதிகள் அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பதவி ஏற்கவிருக்கும் கொலம்பியா மற்றும் பலஸ்தீனம் ஆகியவற்றின் வெளிநாட்டு அமைச்சர்களையும் சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

உறுதி மொழிகளை நிறைவேற்றாமல் எப்படி ஆதரவை எதிர்பார்க்க முடியும்

ஐ.தே.க. ஏமாற்றப்பார்க்கிறது என்கிறார் தொண்டா

கொழும்பு, செப். 24

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி கோருவதற்கு முன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு ஏற்கெனவே அளித்த உறுதி மொழிகளைக் கௌரவிக்க வேண்டும்.

இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்கள் எமது ஆதரவை எப்படி எதிர்பார்க்க முடியும்? என்றும் அவர் கேட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக வாக்குகளைப் பெறவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகத் தான் இ.தொ.கா. வேட்பாளர்கள் ஐ. தே. க. தேர்தல் சின்னத்தில் போட்டியிட்டார்கள்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்மை ஏமாற்றப் பார்க்கின்றனர் என்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

தேர்தல் தினத்துக்கு முதல் நாளே ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளித்துவந்த ஆதரவை விலக்கப்போவதாக கூறவேண்டிய ஒரு சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது என்றும் தொண்டமான் கூறினார்.

வாக்களிப்பு நிலையங்களில் முகவர்களை நியமனஞ்செய்வது தொடர்பாக ஏற்பட்ட தகராறே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

(இ-எ)

நிர்வாகசேவை பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 24

அடுத்தமாதம் 22 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்த இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

கிட்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முதல் இரவு 10 மணி வரையும் பொது மக்கள் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூங்காவை பார்வையிடுவதற்காக பாடசாலை மாணவர்களை அழைத்து வருவோர் முன்னரே பூங்கா நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு [illegible] ஏற்பாடுகளை செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இந்தியாவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.

அந்த நகரில் "பிளேக்", நோய்க்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை இந்த நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 74 என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இந்த எண்ணிக்கை மிக அதிகம் என்று வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன.

170 பேர் "பிளேக்" நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக இந்திய நலத்துறை தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருவதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பெருமளவான 'அன்டி பயாற்றிக்' மருந்து வகைகள் சூரத் நகருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறப்பு மருத்துவ குழுக்கள் வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தி வருகின்றன.

பாடசாலைகளும், திரையரங்குகளும் அந்த நகரில் மூடப்பட்டுள்ளன.

மக்கள் மத்தியில் பெரும்பீதி ஏற்பட்டிருக்கிறது. சூரத்தில் இருந்து செல்லும் அனைத்து ரயில் போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன.

சூரத் நகரில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் மக்கள் பம்பாய் நகருக்குச் செல்வதால் ஏற்கெனவே மிகவும் மக்கள் நெரிசல் மிக்க பம்பாய் நகரிலும் அந்த நோய் பரவி விடக்கூடும் என அஞ்சப்படுகிறது. (ஐ)

சொத்திஉபாலி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கின் மேல்விசாரணை இம்மாதம் 28 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் அனைவரையும் [illegible] இரகசியப் [illegible] கொழும்புக்கு மீண்டும் கூட்டிச் சென்றனர். (இ-எ)

திலீபனின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரு நாவேந்தன் தொடர் உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்தார்.

சண்டிலிப்பாய் கல்வளை கலைவட்டத்தினரினதும், புத்தூர் கலைமதி கிராமத்தினரினதும் ஆட்டக் காவடிகளும்— யாழ் சிற்றூர்திகள் சங்கமும், முச்சக்கரவண்டி சங்கமும் இணைந்து எடுத்த பறவைக் காவடிகளும்— நல்லூர் உண்ணாவிரத நிகழ்விடத்துக்கு வந்து சேர்ந்தன.

பறவைக் காவடி

அங்கு உண்ணாவிரதம் நடக்கும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த ஆறு அடி உயரமான பெரிய மெழுகுதிரியை பறவைக் காவடி தாங்கிவந்த இருவரும் பறவைக்காவடியுடன் இருந்தவாறே கொளுத்தி அஞ்சலி செலுத்தினர்.

தென்மராட்சியில் இருந்து தோட்டை அமைப்பினரால் அலங்கார ஊர்தி ஒன்று திலீபனின் பெரிய அளவிலான திருவுருவப்படத்தைத் தாங்கியவாறு நல்லூரை வந்தடைந்தது.

செயலகத்தில் சரமதானம்

யாழ். செயலகத்தில் நேற்று சிரமதானம் இடம்பெற்றது.

யாழ். செயலக ஊழியர்கள், நிர்வாக அதிகாரிகள் சேர்ந்து செயலக சுற்றாடல் பகுதியையும், அலுவலகங்களையும் சிரமதானம் மூலம் சுத்தம் செய்தனர்.

இச்சிரமதான வேலைகளை யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலைநாயகம் போல் ஆரம்பித்துவைத்தார்.

பருத்தித்துறையில் இருந்து மந்திகை கண்ணகை அம்மன் கோவிலடி உண்ணாவிரதப் பந்தல் வரை நடைபெற்ற காவடி ஆட்டத்துடன் அங்கு உண்ணாவிரதம் ஆரம்பமானது.

அச்சுவேலி மகிழடி வைரவர் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதத்தில் வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் பங்குபற்றினர்.

நுணாவில் மணங்குளாய் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதத்திலும் மாணவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

வலிகாமம் பகுதியிலும் உண்ணாவிரத நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

(ஆ-15-3-173 31-17)

அரச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தியா சென்றுள்ள திரு. வயலர் பெர்னாண்டோ அடுத்த வாரமே கொழும்பு திரும்புவார் என்பதால் —

ஆரம்பக் கட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக அரசாங்கக் குழு அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரும் என்று கூறப்படுகிறது.

[உ - ஐ]

கைவிலங்கிடப்பட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை பிணையில் விடுவிக்காவிடின் இராணுவத்தினரின் மனோதிடம் பாதிக்கப்படும் என்றும் — இராணுவச் சட்ட அதிகாரி லெப். கேணல் மொஹாந்தி பீரிஸ் நீதவானிடம் தெரிவித்தார்.

பிணை மனுவை நிராகரித்த நீதவான் சந்தேக நபர்கள் அனைவரையும் அடுத்த மாதம் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இராணுவத்தினரை விளக்கமறியலில் வைக்காது. இராணுவத்திடம் ஒப்படைக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் நீதவான் நிராகரித்துவிட்டார்.

விசாரணை முடிந்த பின்னர், சந்தேகநபர்களின் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைவிட்டு வெளியேறுகையில் அங்கு குழுமியிருந்த மக்கள் அவர்களை நோக்கி கிண்டல் செய்தனர்.

சந்தேகநபர்கள் அனைவரும் கைவிலங்கிடப்பட்டு விளக்கமறியலுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக எம்பிலிப்பிட்டிய நீதிமன்றப் பகுதியில் இராணுவமும் பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

(இ-எ-6)

மட்டக்களப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

—மட்டக்களப்பு] என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

தாக்குதலின்போது படையினரிடமிருந்து பின்வரும் ஆயுத தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர்,

★ ரீ 56- II ரக துப்பாக்கி - 01
★ அதற்குரிய மகஸின்— 08
★ நடுத்தர ரவை 205
★ ஏ. கே. ஹோல்சர்— 02
★ ஜே ஆர் கிரனேட்— 03
★ தொப்பிகள்— 02
★ இராணுவ பட்டி - 01

(ஐ)

யாழ். மாவட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ளது.

13 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான அந்த காசோலையை யாழ் அரச அதிபர் செயலகத்துக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் காசோலைகள் உரிய மாணவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவ அவுஸ்திரேலியாவில் உள்ள பலர் முன்வந்துள்ளதாகவும்—

முதற்கட்டமாக 12 மாணவர்களுக்கு இந்த உதவி வழங்[illegible] பல மாணவர்களுக்கு [illegible] அமைப்பைச் சேர்ந்த திரு[illegible] தெரிவித்துள்ளார்.

(ஐ-1)

புனர்வாழ்வு பிரிவு மீண்டும் செயலகத்தில்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு எதிர்வரும் புதன்கிழமை முதல் மீண்டும் யாழ். செயலக கட்டடத்தில் இயங்கவிருக்கிறது.

யாழ். செயலகம் மீது விமானத்தாக்குதல் இடம் பெற்றதையடுத்து, புனர்வாழ்வு பிரிவு யாழ். நகரப்பகுதியில் உள்ள ஒரு கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டு அங்கு இயங்கிவந்தது.

சேதமடைந்திருந்த செயலக கட்டடங்கள் தற்போது திருத்தப்படுவதை அடுத்து புனர்வாழ்வுப் பிரிவு மீண்டும் செயலகத்துக்கு மாற்றப்படவுள்ளது.

"ஹபரண" கப்பல் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், செப். 24

கொழும்புதுறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுப் பின் வடக்கு நோக்கிவர அனுமதிக்கப்பட்ட "ஹபரண" கப்பல் நேற்று காங்கேசன்துறைக்கு வந்துசேர்ந்தது.

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 24

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருந்த, வட இலங்கை சுதேச வைத்திய சபையின் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

[ஐ]

மர்மப்பொருளுடன் -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இராமநாதன் விஜிதரன் [வயது 9] என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

சுய நினைவு இழந்த நிலையில் அந்தச் சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

[ஐ—15]

மரண அறிவித்தல்கள்

திருமதி மகேஸ்வரி ஜெகநாதபிள்ளை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி ஜெகநாதபிள்ளை 23 - 09 - 94 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சு. ஜெகநாத பிள்ளையின் (இளைப்பாறிய தபாலதிபர்) அன்பு மனைவியும், Dr. பாலகுமாரின் (லண்டன்) தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் நேற்று (23-09-94) கொக்குவில் மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. குலசிங்கம்
(சகோதரன்)

குமாரகிரி,
கொக்குவில்.

(33045)

கந்தையா நல்லையா

தாவடி வடக்கைச் சேர்ந்த கந்தையா நல்லையா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் புதல்வரும், கனகம்மாவின் அன்புக் கணவரும், சகுந்தலாதேவி, சிவானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வம், மல்லிகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகம்மா, சரோஜினிபதி ஆகியோரின் சகோதரரும், சின்னத்தம்பி, பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும், சுதர்சன், றஜிகா, முகுந்தன், ராகவன், அருண் (கனடா), ஆரபி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை 24 - 9 - 94 அன்னாரின் தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 1 மணிக்கு தகனக் கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. திருச்செல்வம்
(மருமகன்)

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(33050)

அருணாசலம் ஆறுமுகம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம் இருப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஏழாலை மேற்கு கோட்டைக்காடு, சுன்னாகத்தில் வசித்து வந்தவருமான அருணாசலம் ஆறுமுகம் காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லைவனத்தின் அன்புக் கணவரும், நாகம்மா, அன்னம்மா, காலம்சென்ற கோபாலபிள்ளை, சரஸ்வதி, ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம், சண்முகநாதன், சயந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், காலம்சென்ற சின்னத்தம்பி, வள்ளியம்மை, காலஞ்சென்ற முருகேசு, மகேஸ்வரி, காலஞ்சென்ற சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், வேலும்மயிலும், சுந்தரவேல், மனோகரன், இந்திரகலா, தர்ஷினி, தாமினி, சதீஸ்வரன், லகீகரன், பாஸ்கரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு ஏழாலை இல்லத்தில் நடைபெற்று ஏழாலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சண்முகநாதன்
[மருமகன்]

கோட்டைக்காடு,
ஏழாலை மேற்கு.

[33051]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 198/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24 09 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.